# <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>

## <u>O.S.No.156/2021</u>

| | |
|---|---|
| 1, 2 பிரதிவாதி தரப்பு சாட்சி | **பி.சா. 1** |
| பெயர் | திரு. பாலசுந்தரம் |
| தந்தை / கணவரின் பெயர் | திரு. ஏகாம்பரம் |
| கிராமம் | பல்லிக்கிராமம் |
| வட்டம் | செய்யாறு |
| தொழில் | கூலி |
| வயது | 60 |

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 09.05.1986 | 3ம் பிரதிவாதி தாவா 1வது அயிட்ட சொத்தில் 5 சென்ட் நிலத்தை குப்பனிடம் கிரையம் பெற்ற கிரையபத்திரத்தின் இணைய வழிநகல் பி.சா.ஆ.1 |
| 2. | 12.01.2016 | 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்திற்கு பல்லிகிராம பட்டா எண்.579ன் படி வழங்கப்பட்ட பட்டா இணையவழி நகல் பி.சா.ஆ.2. |
| 3. | 09.02.2010 | 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்திய நிலவரி இரசீது பி.சா.ஆ.3. |
| 4. | 17.03.2012 | 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்திய நிலவரி இரசீது பி.சா.ஆ.4. |
| 5. | 06.03.2020 | 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்திய நிலவரி இரசீது பி.சா.ஆ.5. |
| 6. | 22.01.2022 | 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்திய நிலவரி இரசீது பி.சா.ஆ.6. |
| 7. | 23.06.2011 | 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்திய நிலவரி இரசீது பி.சா.ஆ.7 |
| 8. | 07.01.2025 | தாவா சொத்திற்கு குப்பன் மற்றும் சித்திரை ஆகியோர் பெயரில் வழங்கப்பட்ட அடங்கல் உண்மை நகல் பி.சா.ஆ.8. |
| 9. | 07.01.2022 | 07.01.2022 தேதியில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது எண்ணிக்கை மூன்று முறையே வா.சா.ஆ.9 முதல் 11. |

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.14 19:23:01 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**